1980 பிப்ரவரி 13]

கொண்டுவரவில்லை என்றால் அந்த நேரத்தில் எழுந்து சொன்னால் அது குறிப்பிலே ஏறி அது நியாயமாக இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற காரணத்திற்காகத்தான் நான் அனுமதித்துக் கொண்டு இருக்கிறேன். ஆனால் அதற்குரிய நேரம் இதுவல்ல.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் மிக முக்கியமான பிரச்சினை பற்றிக் கொடுத்திருக்கிறேன். அது தள்ளுபடி செய்யப்படவில்லை. ஆகவே அது எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கெல்லொம் நான் அரை மணி நேரம் ஒதுக்குகிறேன். ஆகவே அந்த நேரத்தில் இந்தப் பிரச்சினையைக் கேட்கலாம்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரவர்களும் இருக்கவேண்டும் என்று தாங்கள் கேட்டுக் கொள்ளவேண்டும். அவர்கள் இல்லாமல் இருந்தால் எங்களுக்கு என்ன பிரயோஜனம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவை இருக்குமானால் அவர்களும் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-30]

4. கவன ஈர்ப்புகள்.

அ. நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதால் பக்கத்து ஏழு கிராம மக்கள் பாதிப்பு குறித்து.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர்அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தென் ஆற்காடு மாவட்டம் நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரி சுரங்கம் வெட்டுவதால் ஏழு கிராமங்களைக் காலி செய்யப்படும் நிலைமையும் அதனால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பீதி குறித்து"

திரு. பி. முசிறிப்புத்தன்: [அமைச்சரின் பேரவைச் செயலர்] எம்மாபுரம் வட்டார விவசாயிகள் நல உரிமைச் சங்கம் அஜிஸ்நகர ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் திரு. துரை முத்துசாமி எம்.எல்.ஏ. அவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருள்கள் பற்றி ஏற்கனவே அரசின் பரிசீலனைக்கு மனுக்கள் அளித்துள்ளனர் :—

(1) தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்காக இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்காக கையகப்படுத்திய நிலங்களுக்குத் தகுந்த ஈட்டுத் தொகை அளிக்க வேண்டும் ;

[1980 பிப்ரவரி 13

(2) அஜிஸ் நகர செட்டில்மெண்ட் நிலங்கள் ஏற்கனவே அரசினருக்கு உரிய நிலங்களாகும். மேலும் மற்ற கிராமங்களிலும் அரசு நிலங்களை நிபந்தனைக்குட்பட்ட நிலப் பட்டாக்கள் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலங்கள் விஷயத்திலும் பிற பட்டா நிலங்களுக்கு வழங்கப்படும் ஈட்டுத் தொகையே அளிக்க வேண்டும்.

(3) நிலம் கையகப்படுத்துவதால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில உள்ள நபர்களுக்கு நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

(4) நிலம் கையகப்படுத்துவதால் வீடு நிலம் இழக்கும் எல்லா மக்களுக்கும் அம்மேரி காட்டுப் பகுதியில் குறைந்தது மூன்று ஏக்கர் நிலமும் வீடு கட்ட மனையும் மற்றும் பிற அனைத்து மறு வாழ்விற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்;

(5) நில ஆர்ஜிதம் செய்யும்கால் நில ஆர்ஜித அலுவலர் வழங்கிய தொகையைக் காட்டிலும் அதிகமான ஈட்டுத் தொகை அரசு வழங்க வேண்டும் என்பதைப்பற்றிய வழக்குகளை விசாரிக்க தனி கோர்ட் ஏற்படுத்த வேண்டும்;

(6) கம்மாபுரம், வடக்கு வெள்ளூர், வேப்பன்குறிச்சி ஊமங்கலம், அஜிஸ் நகர், ஊத்தங்கல் குன்னங்குறிச்சி அம்மேரி மற்றும் நெய்வேலியில் உள்ள விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள், வங்கிகள் மற்றும் தேசிய வங்கிகள் மூலமாகப் பெற்ற கடன் தொகைகள், 1388-ஆம் பசலிக்கான நிலவரித் தொகை நிலவரி பாக்கிகள், பஞ்சாயத்து வரிகள் செலுத்துவதிலிருந்து வஜா செய்யப்பட வேண்டும்.

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் பற்றி தென்னாற்காடு மாவட்ட ஆட்சியாளரும் வருவாய் வாரியமும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தாரும் அறிக்கைகள் அளித்துள்ளனர். அவ்வறிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன. மேற்படி விஷயங்களில் அரசு விரைவில் முடிவுகள் எடுக்கும்.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே இதுபோன்ற எத்தனை ஏக்கர் நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கிறது? அவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. முசிறிப்புத்தன்: தலைவர் அவர்களே உறுப்பினர் அவர்கள் தனியாக எழுதிக் கேட்டால் அதற்குரிய பதில் தரப்படும்.

1980 பிப்ரவரி 13]

திரு. துரை முத்துசாமி : இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதால் நெய்வேலியிலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவதாக முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ? அதை நிறுத்தி வைக்க இந்த அரசு மறு பரிசீலனை செய்யுமா ?

பதில் இல்லை.

ஆ. மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் சப்-கோர்ட் நிறுவவேண்டிய அவசியம் குறித்து.

திரு. சே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, " மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் சப்-கோர்ட் நிறுவ வேண்டிய அவசியம் குறித்து " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir, the Government have accepted the proposal of the High Court, Madras for the constitution of a Sub-Court at Periakulam and have considered the same as Part II Scheme for 1980 and 1981 and the approval of the Standing Finance Committee has been obtained. The above scheme will be implemented during the year 1980–81.

இ. தஞ்சை மாவட்டம் திருவையார் வட்டம் மகாராஜபுரம் பகுதிகளில் பயிர் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோ. இளங்கோவன் திரு. அ. செல்லப்பா ஆகியோர் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாததால் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் மகாராஜபுரம், சாத்தனூர், மரூர், வடுவக்குடி ஆகிய இடங்களில் நெற்பயிர் வாடிவிட்டதால் விவசாயிகளிடம் நிலவும் பதட்ட நிலை குறித்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, " மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடப்படாததால் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் மகாராஜபுரம், சாத்தனூர், மரூர், வடுவக்குடி ஆகிய இடங்களில் நெற்பயிர் வாடிவிட்டதால் விவசாயிகளிடம் நிலவும் பதட்ட நிலை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.